11.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### லக்னௌவில் விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி பயிற்சி

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் 20 பேர் லக்னௌவில் கரும்பு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர்.

நிலக்கோட்டை, வத்தலகுண்டு, சாணார்பட்டி ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த 20 விவசாயிகள் உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள தேசிய கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு அண்மையில் அழைத்து செல்லப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தில் கரும்பு சாகுபடி செய்வது பற்றிய பயிற்சியளிக்கப்பட்டது. பூச்சிக்கொல்லி, நோய்த் தடுப்பு, மற்றும் உரமிடுதல் நிர்வாகம் குறித்தும் கரும்பு சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாடுகள் பற்றியும் 7 நாள்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேற்கண்ட பயிற்சிக்கான ஏற்பாடுகளை நிலக்கோட்டை வட்டார அட்மா திட்ட மேலாளர் ஐ.சிங்கத்துரை செய்திருந்தார். இப்பயிற்சியின் மூலம் கரும்பு சாகுபடி பற்றிய தொழில் நுட்பங்களைத் தெரிந்து பயனடைந்ததாக அதில் பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்தனர்.

### வேளாண்மைப் பல்கலை.யில் புத்துணர்வுப் பயிற்சி

வேளாண் அறிவியல் நிலையத் திட்ட உதவியாளர்களுக்கான புத்துணர்வுப் பயிற்சி முகாம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண் விரிவாக்க இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய இப்பயிற்சியில் அனைத்து மாவட்டத் திட்ட உதவியாளர்கள் 31 பேர் கலந்து கொண்டனர்.

வேளாண் விரிவாக்க இயக்குநரகத்தின் இயக்குநர் எச்.பிலிப் இப்பயிற்சியைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், "வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், புதிய தொழில்நுட்பங்கள் குறித்த சந்தேகங்களுக்குத் தீர்வு காணும் வகையிலும் விடியோ பதிவு

செய்ய வேண்டியதன் அவசியம் குறித்துப் பேசினார். மேலும், தொழில்நுட்பப் பரிமாற்றத்துக்கான தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார்.

இப்பயிற்சியில், வேளாண்மை தொடர்பான விடியோ தயாரிப்பதற்கான திரைக்கதை, ஆவணப்படம், ஆய்வுகள், ஆய்வுக்குப் பின் செய்ய வேண்டிய பணிகள், வேளாண் தொழில்நுட்பப் பரிமாற்றத்துக்கான இணையதள செயலிகளைப் பயன்படுத்துவது ஆகியன குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

**பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

காரைக்கால் பகுதியில் பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்காட்டி வருகின்றனர். இதனால், கடந்த ஆண்டைக் காட்டிலும் நிகழாண்டு கூடுதல் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடிக்கு வாய்ப்பிருப்பதாக வேளாண் துறையினர் தெரிவிக்கின்றனர்.

காரைக்கால் மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 1,000 முதல் 1,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக விழுதியூர், அகலங்கண்ணு, இளையான்குடி, புத்தக்குடி, நெடுங்காடு, கோட்டுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்வார்கள்.

காரைக்கால் பகுதியில் வழக்கமாக தை மாத நெல் அறுவடைக்குப் பிறகு பருத்தி சாகுபடியை தொடங்குவார்கள். இது நான்கரை மாத பயிர் என்ற நிலையில், சித்திரை மாதவாக்கில் பூ பூத்து, காய்க்கும். வைகாசி மாதத்தில் பஞ்சு எடுக்கும் பருவத்துக்கு வரும். இந்தக் காலத்தில் வெயில் தொடர்ந்து இருந்தால் மகசூல் நிறைவாக இருக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

இதுகுறித்து விழுதியூர் விவசாயி மலைப்பெருமாள் புதன்கிழமை கூறும்போது, "கடந்த ஆண்டு கத்திரி வெயில் காலத்தில் 4, 5 நாள்கள் தொடர் மழை பெய்ததால், பருத்திச் செடிகளில் வேர் அழுகல் ஏற்பட்டு, போதிய அளவில் மகசூல் கிடைக்கவில்லை.

இதற்கு முந்தைய ஆண்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் பயிரிடப்பட்ட பருத்தியில், வாடல் நோய் மற்றும் வேரழுகல் நோய் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு இறுதியில் பருவமழையால் நெற்பயிர் பாதிக்கப்பட்ட நிலையில், தற்போது சாகுபடி செய்யப்படும் பருத்தி பயிரில் நோய் பாதிக்காதிருந்தால் நிகழாண்டு பருத்தியில் நல்ல மகசூலை காணலாம்.

இதற்கு, காரைக்கால் வேளாண் துறையினர், தகுந்த ஆலோசனைகள், பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

வேளாண் துறையினர் தரப்பில் கூறும்போது, "நெல் அறுவடைக்குப் பிந்தைய பயிர் சாகுபடிகள் குறித்த கணக்கெடுப்புகள் தற்போது நடந்து வருகிறது. இதன் பிறகு விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குவோம். பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால், கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் நிகழாண்டு கூடுதல் பரப்பில் பருத்தி சாகுபடிக்கு வாய்ப்பிருப்பதாக தெரிவித்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெயில் கால நண்பன்

வறட்சியான பகுதிகளில் விளையும் சோற்றுக் கற்றாழை வெயிலின் பாதிப்புகளில் இருந்து நம்மைக் காப்பதால் 'வெயில் கால நண்பன்' எனப்படுகிறது. காற்றாழைக் கூழ் இயற்கையான சன்ஸ்கிரின். இது சூரிய ஒளியுடன் கலந்து வரும் கடும் வெப்பத்தை ஏற்படுத்தும் கதிர்களில் இருந்து சருமத்தை பாதுகாக்கிறது. வெயில் காலத்தில் ஏற்படும் வேனல்கட்டி, வியர்க்குரு போன்றவற்றுக்கு அருமருந்தாக பரிந்துரை செய்யப்படுகிறது. உடலின் வெப்பநிலையை குளிர்ச்சியாக்க வெயில்காலத்தில் பரிந்துரை செய்யப் படுகிறது. பாரம்பரிய சமையலில் கற்றாழையின் ஜெல்லியை மோர்க்குழம்பில் பயன்படுத்தியுள்ளனர்.

### கால்நடைக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

கரூர்: கரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட, வாங்கலில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நன்னியூர் மற்றும் வாங்கல் பகுதிகளில் நடந்தது. கரூர் வட்டார கால்நடை மருத்துவர் நடராஜன், மாவட்ட உதவி இயக்குனர் டாக்டர் முருகேசன், மாவட்ட உதவி இயக்குனர் டாக்டர் முருகேசன், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் இடம் பெற்றிருந்தனர். பால் கறக்கும் பசு மற்றும் எருமை மாடுகளை பரிசோதித்து கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். அதன்பின், தவுட்டுப்பாளையம், கோட்டை மேடு, பசுபதிபாளையம்,

குளத்தூர், சிந்தாயூர் போன்ற பகுதிகளில் கோமாரி தடுப்பூசி போடும் பணி நடந்தது.

## ரூ.1.10 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் மற்றும் பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 6,000 ஏக்கர் பரப்பளவில், பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அதில், ஆர்.சி.ஹெச்., - டி.சி.ஹெச்., சுரபி போன்ற ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம்தோறும், வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும். நேற்று நடந்த ஏலத்தில், 6,000 மூட்டை பருத்தி ஏலத்துக்கு வந்தது. அதன்படி, ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,517 ரூபாய், அதிக பட்சம், 4,955 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 5,946 ரூபாய், அதிகபட்சம், 6,430 ரூபாய், சுரபி ரகம் குறைந்தபட்சம், 4,295 ரூபாய், அதிகபட்சம், 5,099 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தம், 6,000 மூட்டை பருத்தி, 1.10 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## டபுள் பீன்ஸ்



ஆங்கிலத்தில் லைமா பீன்ஸ் என அழைக்கப்படுகிற டபுள் பீன்ஸுக்கு பெயர் காரணம் இல்லாமல் இல்லை. 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பெரு நாட்டில் முதன் முதலில் இது பயிரிடப்பட்டதாக ஒரு தகவல். அதனாலேயே இதற்கு லைமா பீன்ஸ் என்றொரு பெயர் வந்ததாம்.தமிழ்நாட்டில் டபுள் பீன்ஸ் என்றால்தான் மக்களுக்குப் புரியும். இது பட்டர் பீன்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது. பார்ப்பதற்கு வெண்ணெய் மாதிரி இருப்பதுதான் காரணம் என்கிறார்கள்.

பார்ப்பதற்கு அழகாக இருப்பதோடு, ருசிக்கவும் பிரமாதமான இந்த டபுள் பீன்ஸ், ஏராளமான சத்துகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்கிறார் டயட்டீஷியன் அம்பிகா சேகர். அதிகம் பேர் அறியாத டபுள் பீன்ஸின் ஆரோக்கிய ரகசியங்களைப் பட்டியலிடுவதுடன், அதை வைத்து மூன்று சுவையான உணவுகளையும் சமைத்துக் காட்டுகிறார் அவர்.

டபுள் பீன்ஸ் இரண்டு வகைப்படும். பெரிய பீன்ஸ் 4X2.5 செ.மீ. அளவிலும் சிறிய பீன்ஸ் 3X2 செ.மீ. அளவிலும் காணப்படும். காய்ந்த பீன்ஸ் மற்றும் ஃப்ரெஷ் பீன்ஸ் இரண்டிற்கும் ஒரே மாதிரியான பலன்களே உள்ளது. விதைத்த முதல் மூன்று மாதங்களில் விளையும் பீன்ஸ் பார்க்க அழகாக சிறுநீரக வடிவில் இருக்கும்Fabaceae குடும்பத்தை சேர்ந்த இந்த வகை பீன்ஸ் மத்திய அமெரிக்காவில் விளைய ஆரம்பித்து இப்போது நாடெங்கும் குளிர்பிரதேசங்களில் பயிரிடப்படுகிறது.

**சமைக்கும்முறை**

டபுள் பீன்ஸ் அதன் புரதச்சத்தின் பயனுக்காக பயன்படுத்தப்படுகிறது. மற்ற பருப்பு வகைகள் போல இது அதிகம் பயன்படுத்தாத காரணம் இதில் இருக்கும் நார்ச்சத்தின் அளவு அதிகம் என்பதாலும், இதில் உள்ள ஆக்ஸாலிக் அமிலம் சில நேரங்களில் வயிற்று வலியை உண்டாக்கலாம் என்பதாலும் தான். வாரம் இரண்டு முறை காலை மற்றும் மதிய உணவிற்கு பயன்படுத்தலாம். ஆனால், நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். அப்போது எளிதில் ஜீரணமாகி விடும். அதே போல் சுண்டல் போல் தனியாக வேக வைத்து சாப்பிடாமல் ஏதாவது காய்கறி அல்லது மாவுச் சத்துள்ள உணவுடன் சேர்த்து சாப்பிட்டால் அஜீரணக் கோளாறு இருக்காது. குளிர்காலத்தில் மலிவாக கிடைக்கும். அப்போது வெயிலில் உலர வைத்து பாதுகாத்து வைத்தால் வருடம் முழுவதும் பயன்படுத்தலாம்.

**மருத்துவப் பயன்கள்**

பச்சை மற்றும் காய்ந்த பீன்ஸ், ஃபோலேட் (Folate) எனும் உயிர்ச்சத்து நிறைந்தது. 100 கிராமில் 395 மி.கி. அல்லது 99 சதவிகிதம் இருந்து ஒரு நாளைய தேவையை தருகிறது. இந்த சத்து பி 12 வைட்டமினுடன் சேர்ந்து செல் பிரிவில் டிஎன்ஏ உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கர்ப்ப காலத்தில் இந்த பருப்பு வகையை உட்கொள்வது குழந்தைக்கு நல்ல பலனை அளிக்கும்.இது மிக முக்கியமான பி வைட்டமின்களான (பி1, தையமின்) பி 6 பைரிடாக்ஸின், பான்டதனிக் அமிலம், ரிபோஃபிளேவின், நியாசின் போன்ற சத்துகள் நிறைந்தது. இவை அனைத்தும் மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து வளர்சிதை மாற்றம் செய்ய பெரிதும் பயன்படுபவை.

இரும்புச்சத்து, பொட்டாசியம், காப்பர், மாங்கனீசு சத்துகளை அதிகம் பெற்றுள்ளது. இவை அனைத்தும் நமது உடலில் Electrolyte சமநிலையில் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே சர்க்கரை மற்றும் இதயநோய் உள்ளவர்கள் அவசியம் வாரம் 2 முறை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதில் பொட்டாசியத்தின் அளவு அதிகமாக உள்ளதால் சிறுநீரக நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும். இதிலுள்ள மாங்கனீசு சத்து ஆன்ட்டிஆக்சிடன்ட் உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**எப்படி தேர்வு செய்வது?**

ஃப்ரெஷ்ஷான டபுள் பீன்ஸ், பச்சை பசேலென்ற நிறத்திலும், பளபளவென்றும் இருக்கும். மேலே சுருக்கங்களோ, மஞ்சள் நிறத் திட்டுகளோ காணப்படாது.உலர்ந்த டபுள் பீன்ஸை, ஈரமில்லாத டப்பாவில், காற்று புகாதபடி போட்டு வைத்து, 6 மாதங்கள் வரை வைத்திருந்து உபயோகிக்கலாம்.

**என்ன இருக்கிறது? (100 கிராம் அளவில்)**

புரதம் - 8.3 கிராம்
கொழுப்பு - 0.3 கிராம்
நார்ச்சத்து - 4.3 கிராம்
கார்போ
ஹைட்ரேட் - 12.3 கிராம்

ஆற்றல் - 8 கிலோ கலோரிகள்
கால்சியம் - 40 மி.கி.
பாஸ்பரஸ் - 140 மி.கி.
இரும்புச்சத்து - 2.3 கிராம்
மெக்னீசியம் - 25 மி.கி.

**டபுள் பீன்ஸ் புலாவ்**

**என்னென்ன தேவை?**

சம்பா கோதுமை ரவை - 1 கப், டபுள் பீன்ஸ் - 100 கிராம், வெங்காயம் - 2, தக்காளி - 1, பச்சைமிளகாய் - 2, பட்டை, லவங்கம், ஏலக்காய் - தலா 1, தயிர் - 1 டேபிள்ஸ்பூன், மிளகாய் தூள் - 1 டீஸ்பூன், மல்லி, புதினா - 10 கிராம், இஞ்சி-பூண்டு விழுது - 2 டீஸ்பூன், உப்பு, எண்ணெய்-தேவைக்கு.

**எப்படிச் செய்வது?**

முதலில் கோதுமை ரவையை வறுத்துக் கொள்ளவும். பிறகு குக்கரில் எண்ணெய் ஊற்றி பட்டை, லவங்கம் தாளித்து வெங்காயம், தக்காளி, மிளகாய்தூள், பச்சை மிளகாய், ஏலக்காய், தயிர், மல்லி, உப்பு, புதினா, இஞ்சி-பூண்டு விழுது அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து டபுள் பீன்ஸ், ரவை சேர்த்து ஒன்றுக்கு 2 கப் தண்ணீர் சேர்த்து குறைந்த தீயில் 10 நிமிடம் வேக வைத்து பரிமாறவும்.

**பீன்ஸ் சாலட்**

**என்னென்ன தேவை?**

வெள்ளரிக்காய் - 1, தக்காளி - 1, முட்டைகோஸ் - 50 கிராம், டபுள் பீன்ஸ் - 100 கிராம், கேரட் - 50 கிராம், எலுமிச்சைச்சாறு - 1 டீஸ்பூன், மிளகுத்தூள் - ½ டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு, மாதுளை முத்துகள் - 50 கிராம், ஆலிவ் எண்ணெய் - 1 டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

டபுள் பீன்ஸை உப்பு சேர்த்து வேக வைக்கவும். அனைத்து காய்கறிகளையும் பொடியாக நறுக்கி உப்பு, மிளகுத்தூள், மாதுளை முத்து, ஆலிவ் எண்ணெய், எலுமிச்சைச்சாறு சேர்த்து கலந்து பரிமாறவும்.

**பீன்ஸ் சோயா மசாலா**

**என்னென்ன தேவை?**

டபுள் பீன்ஸ் - 100 கிராம், சோயா சங்க்ஸ் - 100 கிராம், குடைமிளகாய் - 100 கிராம், வெங்காயம் - 100 கிராம், தக்காளி - 100 கிராம், பூண்டு - 5 பற்கள் (பொடியாக நறுக்கியது), இஞ்சி - 10 கிராம் (சிறியதாக நறுக்கவும்), மிளகாய் தூள் - 1 டீஸ்பூன், தனியா தூள் - 2 டீஸ்பூன், கரம் மசாலா - ½ டீஸ்பூன், மஞ்சள்தூள் - ¼ டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 2 டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

டபுள் பீன்ஸை தனியாக உப்பு சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். சோயா சங்க்ஸையும் அதே போல் கொதிக்கும் தண்ணீரில் போட்டு வேக வைத்து தண்ணீரை வடிகட்டி வைத்துக் கொள்ளவும். பின் உருளைக்கிழங்கு வறுப்பது போல் எண்ணெயில் பூண்டு, இஞ்சி, வெங்காயம், தக்காளி, மசாலா, உப்பு மற்றும் குடைமிளகாய் சேர்த்து நன்கு வதங்கியதும் டபுள் பீன்ஸ் மற்றும் சோயா சங்க்ைஸ சேர்த்து வறுத்து பரிமாறவும்.

**உடல் எடையை குறைக்கும் கொள்ளு**




தைராய்டு சுரப்பி சரியான முறையில் வேலை செய்யாததால் எடை கூடும். சரியான வகையில் உடல் உழைப்பு தேவை. வீட்டு வேலைக்கு

இயந்திரங்களை பயன்படுத்துவது, உணவு முறையில் ஏற்படும் மாற்றம் போன்றவற்றால் உடல் எடை அதிகமாகிறது. எனவே, நேரத்துக்கு உணவு சாப்பிட வேண்டும். எண்ணெய் உணவுகளை தவிர்க்க வேண்டும். கொள்ளுவை பயன்படுத்தி உடல் எடையை குறைப்பதற்கான மருந்து தயாரிக்கலாம். கொள்ளுவை வறுத்து பொடி செய்து கொள்ளவும்.

இதில் ஒரு ஸ்பூன் எடுத்து ஊறவைத்த கொடம்புளி தண்ணீர் சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் தினமும் 100 மில்லி அளவுக்கு குடித்துவர உடல் எடைகுறையும். இதை குடித்தால் சிலருக்கு அசிடிட்டி வரலாம். இதை தவிர்க்க மோர் குடிக்கலாம். கொள்ளு உடலுக்கு உஷ்ணத்தை கொடுக்கும். கல்யாண முருங்கை இலையை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கும் தேனீர் தயாரிக்கலாம்.

4 கல்யாண முருங்கை இலைகளை துண்டுகளாக்கி கொள்ளவும். இதனுடன் 10 மிளகு தட்டி போடவும். ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி வெறும் வயிற்றில் தினமும் 100 மில்லி குடித்துவர உடல் எடை குறையும். காலையில் வெறும் வயிற்றில், 2 கல்யாண முருங்கை இலைகளுடன், 5 மிளகு சேர்த்து வெற்றிலை போன்று மடித்து இலையின் சாற்றை சாப்பிட்டு விட்டு சக்கையை துப்பிவிட வேண்டும்.

இது உடல் எடையை குறைக்கும். கல்யாண முருங்கையின் தண்டுகள் அடர்த்தியான முட்களை உடையது. சிவந்த பூக்களை கொண்டது. பூவரச இலைகள் போன்று இருக்கும். அழகுக்காக வளர்க்க கூடியது. இந்த இலைகள் மூட்டுவலியை குறைக்க கூடியது. உஷ்ணமான தன்மை உடையது என்பதால் சளியை போக்க கூடியது. தேனீராக்கி குடிப்பதன் மூலம் தேவையற்ற கொழுப்பை கரைக்கும்.

இதை அடிக்கடி எடுத்து கொள்வதால் உடல் எடை குறையும். உடல் எடையை அதிகரிக்கும் கஞ்சி தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: உளுந்தம் பருப்பு, ஏலக்காய், முந்திரி, பிஸ்தா, பாதாம், பால், நாட்டு சக்கரை, நெய். உளுந்தம் பருப்பை லேசாக வறுத்து ஏலக்காய் சேர்த்து பொடி செய்து வைத்துக்கொள்ளவும். இதேபோல், முந்திரி, பிஸ்தா, பாதாம் ஆகியவற்றை பொடி செய்துகொள்ளவும். இவைகளில் இருந்து தலா ஒரு ஸ்பூன் பொடி எடுத்து தண்ணீர் ஊற்றி கலக்கி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் எடுத்து, அதில் நாட்டு சர்க்கரையை போட்டு கொதிக்க வைக்கவும். இதில் அரை ஸ்பூன் நெய் சேர்க்கவும். இதை நன்றாக காய்ச்சியவுடன் ஏற்கனவே கலந்து வைத்திருந்த கலவையை சேர்க்கவும். இது நன்றாக வெந்தவுடன் காய்ச்சிய பால் சேர்க்கவும். காலையில் உணவு சாப்பிட்ட பின் இந்த கஞ்சியை குடித்துவர உடல் எடை கூடும். உடல் மெலிந்தவர்கள் காலையில் ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய் குடித்தால் உடல் எடை அதிகரிக்கும்.

## விருத்தாசலத்துக்கு 1328 டன் உரம் வந்தது

விருத்தாசலம், : விருத்தாசலம் ரயில் நிலையத்திற்கு சரக்கு ரயிலில் தூத்துக்குடியில் இருந்து ஆயிரத்து 328 டன் உரம் வந்தது. தூத்துக்குடி ஸ்பிக் உர நிறுவனத்தில் இருந்து நேற்று சரக்கு ரயில் மூலம் 283 டன் யூரியா, 443 டன் காம்ப்ளக்ஸ், 61 டன் சூப்பர் பாஸ்பேட் என மொத்தம் ஆயிரத்து 328 டன் உரங்கள் வந்தது. இதனை அங்குள்ள பணியாளர்கள் சரக்கு ரயிலில் இருந்து இறக்கி லாரிகளில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தனியார் உரக்கிடங்குகளுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டனர்.

## காசான்கோட்டையில் வயல்வெளி தினவிழா ஆடுதுறை 50 ரக நெல்லில் சிறந்த மகசூல் பெறலாம்

அரியலூர், : ஆடுதுறை 50 ரகம் பயிரிடுவதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும் என வயல்வெளி தினவிழாவில் தெரிவித்தனர்.அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் காசான்கோட்டை கிராமத்தில் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் வயல் தின விழா நடைபெற்றது. அறிவியல் மைய விஞ்ஞானி ராஜ்கலா விவசாயிகளின் வயல்வெளிக்கு சென்று பார்வையிட்டார். பின்னர் விவசாயிகளிடம் அவர் தெரிவித்தாவது, சம்பா நெற்பயிரில் குருத்துப்பூச்சி, இலைசுருட்டுப்புழு, கதிர்நாவாய் பூச்சி போன்ற நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது மிகவும் சுலபம். இதற்கு மையத்தின் மூலம் தகுந்த ஆலோசனை வழங்கப்பட உள்ளது.

மேலும் விதை நேர்த்தி செய்தல், மன்வளத்தை பாதுகாக்கும் மற்றும் விவசாயத்திற்கு பயன்தரும் நல்ல பூச்சிகளை பாதுகாத்தல் குறித்து அவர் செயல் விளக்கமளித்தார். இதைத்தொடர்ந்து அங்கிருந்த விவசாயிகள் பல்வேறு கேள்விகளை வேளாண் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். அதில் நடப்பாண்டில் வேளாண் அறிவியல் மைய ஆலோசனை படி ஆடுதுறை 50 ரகத்தை பயிர் செய்து பார்த்தோம். மேலும் மையத்தின் ஆலோசனைபடி உர நிர்வாகம், விதை நேர்த்தி, நீர் நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு முறைகளை கையாண்டோம்.

இதில் முக்கியமாக சி.ஆர் 1009 ரகத்தில் இலை சுருட்டுப் புழு, குருத்துப் பூச்சி தாக்கியபோது இரண்டு முதல் மூன்று முறை மருந்து தெளிப்போம். ஆனால் இந்த ஆடுதுறை 50 ரகத்தில் ஒரு முறைகூட பூச்சி மருந்து தெளிக்கவில்லை மற்றும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலும் இல்லை. மேலும் சி.ஆர் 1009 ரகம் பயிரிடும் போது ஒரு ஏக்கருக்கு 2800 கிலோ பெற்றோம். ஆனால் ஆடுதுறை 50 ரகத்தில் 3600 கிலோ பெற்றுள்ளோம்.

எனவே ஆடுதுறை 50 ரகம் சி.ஆர்1009 ரகத்திற்கு பதிலாக சம்பா பருவத்தில் பயிரிட ஏற்ற நெல்லாக உள்ளது. மேலும் இந்த ரகம் ஓரளவு வறட்சியை தாங்கி வளரக் கூடியதாகவும், ஒரு குத்துக்கு 45 முதல் 50 தூர்களும் மேலும் அனைத்து தூர்களிலும் மணிகள் பிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இவ்விழாவில் மையத்தின் பண்ணை மேலாளர் திருமலைவாசன், திட்ட உதவியாளர் விவேகானந்தன் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஜெயங்கொண்டம்: ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (அட்மா) பயறுவகை பயிர்சாகுபடியில் ஒருங்கிணைந்தபயிர் பாதுகாப்பு பற்றிய பண்ணைப்பள்ளி அரியலூர் மாவட்டம் பிச்சனூர் அருகேயுள்ள பூவாய்க்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்தார். சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் ராஜ்கலா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவிதொழில் நுட்ப மேலாளர் முருகன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் பழனிவேல் ஆகியோர் பயறுவகை சாகுபடியில் விதைப்பு மற்றும் அறுவடைவரை கடைபிடிக்க வேண்டிய வேளாண் தொழில் நுட்பங்களான உயிர் உரங்கள் கொண்டு விதைநேர்த்தி செய்தல், விதைப்பு, உரமிடுதல், களைநிர்வாகம், நீர்நிர்வாகம், டி.ஏ.பிஅல்லது பயறு ஒண்டர் தெளிப்புமுறை, பயிர்பாதுகாப்பு, அறுவடைமற்றும் அறுவடைபின்செய் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

விவசாயிகளுக்கு ரைசோபியம் கொண்டு விதை நேர்த்தி செய்வதுகுறித்து செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. விவசாயிகள் உளுந்து சாகுபடி திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பூச்சி மற்றும் நோய் தாக்குதலை

கண்டறியும் முறை மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் அமுதன் வரவேற்றார்.

## 1107 டன் யூரியா தஞ்சை வந்தது

தஞ்சை, : கோடை சாகுபடிக்காக சென்னையில் இருந்து 1107 டன் யூரியா சரக்கு ரயில் மூலம் தஞ்சைக்கு வந்தது. காவிரி டெல்டா மாவட்டங்களில் நடப்பு கோடை பருவத்தில் நெல், கடலை, எள், உளுந்து, பயறு, சோளம் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதற்காக சென்னை மணலியிலிருந்து 1107 டன் யூரியாவும், 123 டன் காம்ப்ளக்ஸ் உரமும் 21 வேகன்கள் மூலம் நேற்று தஞ்சைக்கு வந்து சேர்ந்தது. இந்த உரங்கள் தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, அரியலூர் மாவட்டங்களுக்கு லாரிகள் மூலம் தனியார் உர நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## 2,56,802 டன் நெல் கொள்முதல்

நாகை, :நாகை மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக 283 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது. அதன்மூலம் இதுவரை விவசாயிகளிடமிருந்து 2,56,802 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 95 சதவீத நெல் அறுவடை பணிகள் முடிந்துவிட்டது. இதனால் மாவட்டத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்கள், வியாபாரிகள் மூலம் வெளிமாநில மற்றும் வெளிமாவட்ட நெல் வருவதை தவிர்ப்பதற்காக, விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய வருகிற 14ம் தேதி வரை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக மின்னணு பரிவர்த்தனை முறையில் பணம் பட்டுவாடா செய்யப்படவுள்ளது. எனவே விவசாயிகள் நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்று பயனடையலாம். இவ்வாறு கலெக்டர் பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கம்பம் பகுதியில் இயற்கை உரங்களுக்கு மாறும் விவசாயிகள்

கம்பம், :கம்பம் பகுதியில் விவசாய நிலங்களை பாதுகாக்க விவசாயிகள் ராசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களுக்கு மாறி வருகின்றனர்.கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பல ஆயிரம் ஏக்கரில் பீட்ரூட், நூக்கல், முள்ளங்கி, தக்காளி, வெண்டை, கத்தரி, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் விவசாயமும் நடைபெற்று வருகிறது.

சில ஆண்டுக்கு முன் போதிய மழை இல்லாததால் இப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த இரண்டாம் போக நெற்கதிகள் கருகி விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. இந்நிலையில் இவ்வாண்டு விவசாயிகள் எதிர்பார்த்த அளவு பருவ மழை பெய்ததால் தண்ணீர் பற்றாக்குறையின்றி கடந்த சில மாதங்களுக்கு முன்பாக இரண்டாம் போக நெல் நடவு செய்யப்பட்டு தற்போது கடந்த சில தினங்களாக கம்பம், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் அறுவடை செய்யும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் பெரும்பாலான விவசாயிகள் இயற்கை உரங்களால் விவசாய நிலங்களில் மண்வளம் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறி ரசாயன உரங்களை தவிர்த்து தங்கள் விவசாய நிலங்களில் ஆடுகளை வைத்து கிடை அமைத்துள்ளனர். சுமார் 200 ஆடுகள் வரை தனித்தனியாக தற்காலிகமாக ஒரு கொட்டகை போல் அமைத்து ஆடுகளை விட்டு விடுகின்றனர்.இந்த ஆடுகளின் சிறுநீர் மற்றும் புழுக்கைகள் வயல்வெளியில் விழுவதால் அவைகள் நாளடைவில் மக்கி விவசாய நிலங்களில் உள்ள மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் மகசூலும் நல்ல முறையில் கிடப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து ஆட்டு கிடை உரிமையாளர்கள் கூறுகையில், “ஆண்டு தோறும் அறுவடை முடிந்த சமயங்களில் விவசாயிகளின் வேண்டுகோளின்படி வயல்வெளிகளில் ஆங்காங்கே ஆடுகளை வைத்து கிடை அமைத்து வருகிறோம். இதனால் நல்லதொரு பலன் கிடைக்கிறது. ஒரு ஆட்டிற்கு நாளொன்றுக்கு தலா ரூ.1 வீதம் விவசாயிகளிடம் பெற்றுக்கொள்கிறோம்” என்றனர்.